www.tamilarangam.net

# சிந்து!



ஆடி 1989

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"
அச்சமில்லை
 அச்சமில்லை
  அச்சமென்பதில்லையே
உச்சிமீது வானிடிந்து
வீழுகின்ற போதும்
 அச்சமில்லை
  அச்சமில்லை
   அச்சமென்பதில்லையே "

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிந்து

ஆசிரியர்:
சி. உதயகுமார்

வடிவமைப்பு:
நேசன்

அட்டைப்பட
கருத்து:
ஸ்ரீ




கலை இலக்கிய வெளியீடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எமது எண்ணம்

ஒரு சுதந்திரமான சுத ந்திரமான இன மக்களின் சுதந்திரத்தில் அதன் இறைமையில் தலையிடும் ஒரு அரசினதோ அல்லது நாட்டினதோ நட வடிக்கைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்த வகையில் தென்னமெரி க்க, இலத்தீன் அமெரிக்க, வியட்நாமிய, பலஸ்தீன நாட்டு தேசிய மக்களின் வரிசையில் தமிழ் ஈழ மக்களும் அடங் குகின்றனர்.

இனங்களுக்கிடையிலான சமத் துவத்தையும் சகோதரத்துவத்தையும் நிலைநாட்டு நாட்டத்தைக் காண வேண்டிய அரசியல் பொறு ப்பு கொண்ட எந்தவொரு அரசியலா ளர்களும் இப்பொறுப்பினை மறந்து அல் லது மறைத்து இந்நிலையில் சுயபி ரயோசனம் தேடுவது வேதனைக்குரியதும் கண்டனத்திற்குரியதுமாகும்.

இந்த சுதந்திரப் பிரா ந்திய நாடுகளின் நலனும் பாதுகாப்பும் என்ற போர்வையில் இன்று இந்தியா. இலங்கையினுள் 'ஒப்பந்தம்' என்றும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாதையிலிருந்து நழுவிப்போவதாகும், இதன் பின்னர் அதன் செயற்பாடுகளையும் தெளிவுபடுத்தி விட்டது. இன்று இலங்கைத் தீவினுள் முன்னரை விட அதிக அளவினில் இதன் கடமைகளைத் தொடர்ந்திருக்கின்றது எனப்படுத்தக் கூடும்.

பிரேமதாசாவோ விடுதலைப்புலிகளோ ஏற்பட்ட இந்நிலைமை இலங்கைத் தீவினுள் உள்ள எல்லா இனங்களையும் அமைதிப் படையையும் தங்கள் பொறுப்புகளை உணரச் செய்துள்ளது விவாதமின்றிக் கூறக்கூடிய தொன்றாகும்.

இவ்விழிப்புணர்வே இன்று இந்தியா வெளியேற வேண்டுமென்ற கோஷங்களாகும். இந்திய ஏகாதிபத்தியத்தின் ஆதரவாளர்கள் இக்கோஷங்களிற்குச் சமாந்தரமாக அதுவே இதுவரை இந்தியாவின் நடவடிக்கைகளைக் கைகொள்ளப் பாதுகாப்பாக இருந்த தேசியத் தமிழியக்கத்தை வெளிநாட்டு ஆலோசகர் அதிகாரியை 'இந்தியாவினது அதன் அயல் நாடுகளின் மீதான எல்லா நடவடிக்கைகளையும் நாம் முற்று முழுதாக எதிர்த்துக் கொள்ளவேண்டியது' என்றும் சொல்லவைத் துள்ளது.

எம்மைப் பொறுத்த வரையில் இந்தியா வெளியேற வேண்டுமென்பதில் எல்லோருக்கும் உடன்பாடுடையான கருத்தையும் கொண்டிருக்கையே எம்மிடையே முழுமையான விழிப்புணர்வு ஏற்பட்டு விட்டதற்கு அடையாளம். தீர்வைத் தேடும் எண்ணத்தில் ஈடுபடும் சக்திகளையும் இத் தெரியவைக்கின்றது. (தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மதுபோதைத் தடுப்பு பிரசாரத்துக்கு கலை இலக்கியங்களைப் பயன்படுத்தலாம்

ஆழமான மனித உறவுகளை ஆராயும் படைப்புகள் மதுபோதை தடுப்பதற்கு உதவலாம். மதுவுக்கு அடிமையாகி ஒருவனை வெறுமனே குடிக்காதே என்று சொல்வதால் பயன் எதுவுமில்லை. அவனுள் சென்று ஏன் குடிக்கிறான் என்பதை ஆராய்ந்து அதற்கான பரிகாரத்தை அவனுக்கு உணர்த்தினால் அவன் திருந்துவான்.

யாழ். தொடர்பகத்தில் இடம் பெற்ற மதுபோதைப் பொருள் தடுப்புக்கல்விக்கான ஆசிரியர். பயிற்சிக் கருத்தரங்கில் பேசுகையில் யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீடத் தலைவர் பேராசிரியர் கா.சிவத்தம்பி மேற்கண்டவாறு கூறினார்.

டாக்டர் க.சுகுமார் தலைமையில் இடம் பெற்ற இக் கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

கலை, இலக்கியங்களை மதுபோதைத் தடுப்பு பிரசாரத்துக்குப் பயன் படுத்தலாம்.

கலைக்கு அப்பாலானவிடயங்களையும் கலை தன்னுள் அடக்கியுள்ளது. கலையால் வரும் தொடர்பு மற்றவற்றிலும் பார்க்க வித்தியாசமானது. எதனாலும்ஏற்படுத்தமுடியாத தாக்கத்தை கலை ஏற்படுத்தும். கலையின் தொடர்பு யாரையும் கவரக்கூடியது.

கலைக்கு பொருள் உண்டு. எந்தக் கலையாக இருந்தாலும் அதற்கு மனித உறவு, மனித பண்பாடு முக்கியம். மனித உறவுகள் ஆழமாக ஆராயப்பட்டு வெளிவரும் கலைப் படைப்புக்களேசமுதாயத்தின் பிரச்சினைகளைத் தீர்க்க உதவும்.

அப்படி ஆழமாக மனித உறவுகளை ஆராயும் படைப்புக்கள் மதுபோதைத் தடுப்புக்கு உதவலாம்.

இப்படி அவர் கூறினார்.

**பேராசிரியர் சிவத்தம்பி**

**கூறுகின்றார்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இது ஒரு செய்தி..

## தகவல்: கிதி

பாரீஸ் இல் தமிழ்ப்பற்றிய சுமார் [illegible] நான்கு வருடங்களாக இயங்கிக் கொண்டிருக்கும் ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் இலண்டன், பாரிஸ், மே. ஜேர்மனி போன்ற இடங்களிலும் வேர்விட்டு விருட்சமாக வளர்ந்திருக்கின்றது.

அது! உலகத் தமிழர்களே: ஒன்றிணைந்து! ஒற்றுமைப்படுத்தி தமிழின் மாட்சிமையையும் மகிமையையும் உலகிற்கு உரைத்த பெருந்தலைவர் தனிநாயகம் அடிகளார் நினைவாக உலகளாவிய ரீதியில் ஒரு சிறுகதைப் போட்டியை நடாத்த விருக்கின்றது.

தொடர்புகட்கு:-

MR. M. ARIYANAYAGAM
30 RUE DE TOURVILLE
93600 AULNAY-SOUS-
-BOIS

www.tamilarangam.net

# அதிர்வுகள்



சில்வண்டின் இரைச்சல் இரவின் நிசப்தத்தைக் கிழித்துக்கொண்டு பெரும் ஓசையாகக் கேட்டுக்கொண்டிருந்தது. பௌர்ணமி கழிந்த மூன்றும் நாளானதையால் பகுதி மறைந்த சந்திரன் மேகத்திரைகளைக் கீறிக் கொண்டு எதிர்த்திசையில் விரைவாகப் போக்குக் காட்டிக் கொண்டிருந்தான். வேலியோரத்துத் தென்னை மரத்தைக் கிழித்துக் கொண்டு இறங்கிய சந்திரக் கதிர்கள் வீட்டு முற்றத்தில் தென்னோலை வடிவில் படிந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மெலிதாக வீசிய காற்றில் சலசலத்துக் கொண்டிருந்தது.

சுப்பிரமணியத்தார் வீட்டின் முன் திண்ணையில் இரு கரங்களாலும் கால்களைச் சேர்த்தணைத்து முழங்காலில் நாடி புதைத்து சிந்தனையில் ஆழ்ந்து போயிருந்தார். நேரம் நடுச் சாமத்தை நெருங்கிக் கொண்டிருந்த போதும் நித்திரையின்றி மனம் புழுங்கிக் கொண்டிருந்தார்.

'என்ரை மகனே' இதய ஆழத்தில் இருந்து பொங்கி எழுந்து பாசம் தீனமாக வெளிப்பட நெஞ்சு விம்மித்தணிந்து ஏறித்தணிந்து கொண்டிருந்தது. அவர் காலடியில் கிடந்த முன்னாங்கால்களினிடையில் தலை மண்ணில் அழுத்திப் படுத்திருந்த 'டீசர்' இடையிடையே தலைதூக்கி அவரையுடைக்க உர்ரென்று உறுமிவிட்டு மீண்டும் தன்னிலையில் படுத்துக் கொண்டிருந்தது. திண்ணையின் ஓரத்தில் படுத்திருந்த பொன்னம்மாள் இடையிடையே இருமிக்கொண்டிருந்தார்.

வந்திருந்தவர்களெல்லாம் செவி கருதியும் நிலைமையின் அழுத்தத்தாலும் ஒவ்வொருவராய் திரும்பிவிட்டபின்னும் உடைவேங்கி விட்டவர் பொன்னம்மாள் ஒருவர்தான்.

"ஐயோ என்ரை ராசா"

உள்ளிருந்து கேட்ட ஓலத்தின் கேவல் ஒலி இவர் நெஞ்சைக் கீறிப் பிளந்து கொண்டு சென்றது.

www.tamilarangam.net

என்ன அறிவான அன்பான
பிள்ளை அவன். எனது பிள்ளை என்று சொல்லும்
விதங்களில் பெருமைப்படக்கூடியவாறு அவன்
இருந்தான்.

"ராஜராஜசோழா" என்று சிறந்த
வட்டாரம் முழுதும் ஓடி வந்து அன்பு செய்
கையில் எண்ணமும் எவ்விதம் புளாங்கிதமடை
ந்தது. மக்கள் பற்றியும் மக்கள் வாழ்க்கை பற்றியும்
இவரும் சிந்தனையைச் சேர்த்து இவர்கள் எவ்
வாறு தாம் தெளிவாகச் சிந்திக்கிறார்கள்.
வர்க்க விடுதலையின் மூலம் இன விடுதலையை வென்று
எடுப்பது பற்றி எவ்வாறு தெளிவுடனும் நம்பிக்கை
யுடனும் இருக்கிறார்கள்

உயர்சாதி என்ற மமதை
யுடனும் காசுபணம் இருக்கிறது என்ற திமிரு
டனும் நான் ஆடிய ஆட்டங்களையும்,
செய்த அவலங்களையும் எவ்வாறு பெருமை
என்று மென்ன மென்ன எடுத்துச் சொல்லி
மனிதனாய் இருக்க, சிந்திக்க சொல்லித் தந்தது
எனது பிள்ளைதான். சிவபெருமானுக்கு முருகக்
கடவுள் சொல்லிக் கொடுக்கவில்லையா?
அது போல.

தன்னொத்தவர்களுடன்
சேர்ந்து இயக்கம் போராட்டமென்று போன
பொழுது என்னால் தாங்கிக் கொள்ளத்தான்
முடியவில்லை. இருக்கிற ஒரு பிள்ளையையும்
தொலைத்துப் போட்டு என்ன செய்வது என்று
தனிமையில் கவலைப்பட்டேன். ஆனால் எமது இலட்சிய
த்தை வென்றெடுக்க நாம் முன் செல்ல வேண்டிய
வழி இதுதான் என்று அவன் விளக்கிச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொன்ன போது நான் என்ன செய்ய முடியும். அந்த ஆர்ப்பாட்டம் பண்ணியதால் இன்று வரையும் நான் தான் சோதனைப் படுத்த வேண்டியிருக்கிறது. மக்களுக்காக வேண்டிய அரசாங்கமே மக்களை அழிக்கும் படைகளை ஏவிவிட்டுக் கொண்டிருக்கும் போது இவர்கள் சொல்லும் நீதிநியாயங்கள் அவர்களால் புரிந்து கொள்ள முடியுமா? — என்பதை என்னால் நான் மிகவும் கவலைப்பட்டாலும் என் மக்களையும் அவள் பெற்றவர்களையும் நான் உறங்கு விக்க மட்டும் தெரியவில்லை.

இவை எல்லாவற்றையும் இன்று தேடுதல் என்ற பேரில் சுழல் போல வந்த இராணுவம் அள்ளிக் கொண்டு போய்விட்டது. இருந்தவர்களைத் திட்டும் பிடிபட்டவர்களை டிரக்கில் அள்ளிப் போட்டுக் கொண்டு போய்விட்டார்கள்.

ஊருக்குத் தெற்கால இருக்கிற ஆலமரத்தடியில ஐந்தாறு இளைஞர்களை நிற்கவிட்டுச் சுட்டுப் போட்டு அதிலேயே பெற்றோல் ஊற்றிக் கொளுத்திப் போட்டார்கள்! அட்டூழியம் செய்த இராணுவம் திரும்பிப் போனபிறகு பயந்து பயந்து ஒன்று கூடியவர்கள் கண்ட கேட்ட விஷயங்கள் என்று மொன்ன மொன்னச் சொல்லத் தொட்டப்பட்ட செய்திகள் இவை

'உவன் சரவணன்ரை பெடியன் என்னுடைய தான் தேடிவந்தவன். தீபனை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கேட்ட வெடிச்சத்தத்தில் அவன் சுருண்டு
விழ நான் தொடர்ந்தும் பயத்தை அடக்கிப்பு.....
சொன்னவர் அதையே திரும்பவும் மெல்லச்
சொன்னார். 'இன்றும் அந்தப் பெடியன்
"ஐயோ.....அம்மா" என்ற வார்த்தை காதுக்குள்
கேட்குது!

வந்தவர் போனவரிடமெல்லாம் ராஜனைப் பற்றி விசாரித்து நடமாடி கடைசியாக ஆமிக்காரர் பிடித்து வைத்திருந்த வயசாளி என்று விருப்பட்டு வந்து இத்தினைத் தை விசாரிக்க

'ஆமிக்காரர் பிடிச்சுவைச்சிருந்த ஆட்களிலையும் ராஜன் இல்லை'

என்று பதிலால் ஆலமரத்தடியில சுட்ட பெடியனில ராஜனும்.... நெஞ்சதிர முடிவுக்கு வந்து நம்பட்ட இழப்பை தாங்கிக் கொள்ள முடியாத சோகத்தீட்டன் துக்கமிழந்து நடுச்சாமமாகிய இவ்வேளையிலும் விழித்துக்கொண்டிருக்க....

திடீரென்று திடுக்கிட்டு வெளிப்புறத்தைக் கண்ட உருவிய சிலர் அருந்து நின்ற ஒருவரை அவைவக்கண்டு பலமாகக் குரைக்கத் தொடங்கியது. நீ விழிப்புக் கொண்ட பொன்னம்மா எழும்பியிருந்து 'என்ன மோனை' என்று' என்னைக் கேட்டாள்.

'என்ன வெண்டு தெரியவில்லை அம்மா'

பதில் கூறிய படியே இருளைப் பார்க்கிறேன். 'ஆமிக்காரர் இல்வாங்கோ' பொன்னம்மா அங்கலாய்ப்புடன் எழுந்து நின்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டார்' "நீங்கள் உள்ளுக்கு வாங்கோப்பா" என்ற சத்தம் ! 'என்னை கடவுளே... கடவுளே" என்று பிரார்த்தனையில் கரைந்தாள்

வீதியில் ஒரு ஆள் ஆடியாடி வருவது நிலவொளியில் இப்போது தெளிவாகத் தெரிந்தது. 'ஐயோ இந்த நேரம்... இந்தப் பயல் சுத்திக்கொண்டு'.... நிலவோடைக் கொண்டாடும் போதே சீசனை அதட்டுகின்றான்

படையணியில் நின்று 'ஐயா -- ஐயா' என்று குரல் கொடுப்பது யார்?

நாகன்

எனது காலம் கடந்த அட்டூழியங்களின் காட்சிச் சின்னமாக இன்னும் நடமாடிக் கொண்டிருப்பவன்.

சாதி வெறி கொடிகட்டிப் பறந்த காலம். தாழ்த்தப்பட்ட ஒருவரும் மேல்சட்டை அணிவது அனுமதிக்கப்படாத நேரம். இளமையின் துடிப்பில் அநியாயத்தைக் கண்டு அதை உடைக்க வேணுமென்று ஆஸ்பத்திரிக்கு முதல் முதல் சேட் போட்டுக்கொண்டு வர, இதைப் பொறுக்க முடியாத நாலும் என்னை தொடர்ந்தவர்களும் ஒரு வீதியில் வைத்து அவன் சேட்டைக் கிழித்து பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியால் முதுகில் குறியிழுக்க, அந்த வேதனை தாங்காது மயங்கி விழுந்தவனைப் பார்த்து 'இனியும் ஒருவருக்கும் இந்த எண்ணம் வராமல் இருக்க வேணுமென்டு தான் இந்த அடையாளம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது' என்று சொல்லி அட்டகாசமாகச் சிரிக்கிறான். இன்னும் இவனைக் காணும் போதெல்லாம் என்னுள்ளும் உடைந்து வெட்கத்தில் சாம்பிப் போய் விடுவேன். அப்படியொரு கீழ்மையானவனாய் நான் இருந்திருக்கிறேன்.

'ஐயா.... நாகனின் அழைப்பில் திரும்பிய நான் 'இந்த நாவலூருடையான் எங்கை வந்தீர்?' கேள்வியோடு அவனைப் பார்த்தேன். உங்கடை மகனை செத்துப் போட்டுது என்டு நீங்கள் கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறியள் - என்டு கேள்விப் பட்டேன். இப்ப தான் வந்தனான். இன்னாட்டி காலமைதான் வாறனெண்டு இருந்தனான். என்ர வீட்டுக்குப் பக்கத்திலை வடலிக் காணிக்கை உங்கடை மகனும் இன்னும் ரெண்டு மூன்று பேரும் பத்திரமாய் இருக்கினம். நீங்கள் ஒண்டுக்கும் யோசியாமையுங்கோ விடிஞ்ச பிறகு அவை வருவினம்.

எனக்கு வந்த சந்தோசத்துக்கு அவனைக் கட்டிப் பிடித்து ஆடவேணும் போல இருந்தது. நான் அவனுக்குச் செய்த அநியாயத்துக்கு என்ரை மகனைக் காட்டிக் கொடுத்து பழி தீர்த்திருக்கலாம் தானே.... ஆண்டவன் அதைச் செய்யாதவன்... இந்த நடுச்சாமத்தில் எனது தூக்கம் நீக்க வென்று வந்திருக்கிறானே இவன்... என்னை விட மானவன்..."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனது இந்நிலையை உடைத்தது அவனின் கேள்வி

"நீ ஏன் இந்தச் சின்ன வயதில் ராவிடேட்டுக்கிளால வந்தனி... உன்ர மோனை அனுப்பச் சொல்லியிருக்கலாம் தானே" அதீதமான வாஞ்சையுடன் அவனை ஆராய்வுடனும் பார்க்கிறேன்

"என்ர பிள்ளை" வேதனையைப் புடைக்காமல் தோளில் தொங்கிய துண்டை எடுத்து வாயைப் பொத்திக் கொள்கிறேன். அவன் உடல் குலுங்கிக் கொண்டிருந்தது.

என்ன துன்பம் இவனுக்கு

"என்ர பிள்ளையை ஆமி பிடிச்சுக் கொண்டு போட்டுது!" உடலதிர குலுங்கி அழும் இவனது துயரம் சில கணங்களுக்கு முன்வரை எனக்கு மிகவும் பரிச்சயமாக இருந்ததே.

"ஆண்டவனே" பிரார்த்திப்பதை விட அவனுக்கு எவ்வகையில் நான் ஆறுதல் கொடுக்க முடியும்

"நான்... நான்... வாறன்" பொங்கியழுதபடி திரும்பி நடக்கும் அவனைப் பார்க்கிறேன். அவன் தோளில் இருக்கும் துவக்கு என்னைப் பார்த்துச் சிரிக்கிறது.

"நாகன்.... நீ மனுஷனடா... நான்... ... நான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என் இதயத்தில் ஏற்பட்ட அதிர்வுகள்
அழைக்கப்படுவது தெரியாது அந்த உருவம்
தள்ளாடித் தள்ளாடிச் சென்று மறையும்
வரை பார்த்துக் கொண்டிருக்கிறேன்
கண்களில் கண்ணீருடன்.

— இளந்திரையன் —

எதிர்பாருங்கள் !!

இளந்திரையன்

எழுதும்,

# விழுதுகள்

தொடர்கதை

அடுத்த இதழிலிருந்து

ஆரம்பமாகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கனடாவிலிருந்து ஒரு கவிதை...

# புறப்படு..!

வீடியோவில்...
விரசமான படம் பார்க்கும்
வீரத்தமிழா....!
வீணர்களால்
விரட்டியடிக்கப்படும் — உன்
தாயின் முகம் தெரியலியா..?
சோதனைப் பணையில்
சிதையாக்கப்பட்ட — உன்
சகோதரியின் முகம்
மறந்து விட்டதா...?
புறப்படு
ஒளிர் பாலி வா
சுகபோகம் போதும்
தமிழிற்கே...!
தமிழ் ஈழத்திற்கே...!!
அளித்திடு — உன்
பங்களிப்பை.


எரியீட்டி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இது



# ஒரு கண்டுபிடிப்பு

கொலம்பஸ் வாஸ்கொடகாமா போன்ற கண்டுபிடிப்பாளர் வரிசையில் நாங்களும் புதிய அறிவியல் தொழில் நுட்பத்தில் நாங்கள் இணைகின்றனவா என்று தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியிலும் ஒரு நாட்டை உருவாக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

கடந்த ஏப்ரல் மாதம் விசைப்படகில் வந்து சேர்ந்த தமிழ் மீனவர்கள் பலர் [illegible] திசையில் இந்தியா இந்தோனேசியத் தீவுக் கூட்டத்தில் சேர்ந்தபோது பொலி ஸாரால் [illegible] பிடிபட்டனர். பின் அவர்கள் இந்திய சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர்களே விடியலின் முன்னோ
டியாய் உள்ள எழுவர்களும் திரைச்
சனையான், தொண்டர் ஸ்தாபனங்கள் பகிரங்
மாக 'கோரிக்கை விடுத்தனர்.

ஆர்ப்பாட்டங்கள்

கோஷங்கள், கடையடைப்புகள்.....
எந்தப் பிரயத்தனமும் பலிக்கவில்லை.

மூன்று வாரங்களின் பின்
அந்நாட்டு நலன் விரும்பிகளினதும்
மனிதாபிமானிகளினதும் பெருமுயற்
அறிஞர்களினதும் நம்மவர்களின் கடும்
முயற்சியினாலும் ஒரு நாள் அதிகாலை
சிறை உடைக்கப்பட்டு வெளி
யேறினர்.

மட்டக்களப்பு சிறை உடை
த்ததைப் போல விடுதலை முன்னோடிகள்
கண்ட தேசங்களிலும் நடந்தது
வரலாறு.

<= தகவல்: ஜீதி =>



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனம் திறந்து சொல்லடி...



கட்டழகுப் பெட்டகமே
கண்ணுக்கினிய பூம்பொழிலே
மைதொட்டெழுதி யான்யாத்து
மையலுற்ற கவிதைப் பெண்ணே!

நித்தம் உன் நினைவால்
சித்தம் கலங்குகின்றேன்
புத்தம் புது வடிவாய்
புதுமையுடன் காண்கின்றேன்

நாளொரு ஸ்வரத்தொடு
நடந்து நீ வருகையில்
நாளொரு வார்த்தை
நான் கேட்ட நினைப்பேன்

தூங்குகின்ற போதினிலே
தூக்கத்தைக் கலைக்கின்றாய்
பசிக்கின்ற போதினிலே
பசியதை விரட்டுகின்றாய்

www.tamilarangam.net

மையிலே எழுதும் கொண்ட
மையலினில் அழுதிடும்
மறக்காமல் உன்புதுமை
மனத்திரையில் எழுதுகின்றேன்

எழுதுவது வெறியாச்சு
எழுதியவன் நிலவாச்சு
எத்தனையும் எண்ணமின்றோ
எழுகின்ற தாமமாச்சு

வைத்தியம் என்று பலர்
படித்து இழித்துரைக்க
மடையன் என்று பழித்து
மாற்றார் இகழ்ந்துரைக்க

தொழிலிற் கவனமின்றி
தொண்டே தொழிலென்று
கொண்ட என் வீட்டு
அடுப்புகளோ தூங்குதம்

கம்பனைக் காதலித்து
கன்னியாகவே இருந்தாய்
ஏழையெனையும் காதலித்தாய்
அப்படித்தான் வாழ்வாயோ?

காதலிக்கத்தான் தெரியும்
கவிதைப் பெண்ணேயுனக்கு
மணமுடிக்கத் தெரியாதா...?
மனந்திறந்து சொல்லடி.

சு. கருணாநிதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கிராமிய இலக்கியமும் எழுத்தாளர் பங்கும்

— ஓர் பார்வை —

கே. டானியல்

தூரத்தேயிருந்து மனதால் மேலோட்டமாகக் கிராமத்தைப் பார்த்து, பேச்சுவாக்கில் அறிந்தவைகளையும், ஊகிப்பவைகளையும் வைத்துக் கொண்டு புனைந்த கதைகளையும், நாடோடிப்பாடல்களைத் தேடிப்பிடித்து, தேடியவற்றுள் காமரசம் சொட்டும் பகுதிகளை மட்டும் தெரிவு செய்து தரப்பட்ட நாடோடிப் பாடல் திரட்டுக்களையுந்தான் கிராமிய இலக்கியங்கள் என்று தமிழ் வாசகர்கள் கண்டிருக்கின்றனர். இந்த மட்டங்களில் நின்று கொண்டேதான் இவைகளுக்கான விமர்சனங்களும் தரப்பட்டுள்ளன. இதனால் கிராமிய இலக்கியங்கள் எனப்பட்டவை கிராமப்புற வாசகர்களாலேயே விரும்பப்படாதவை ஆகியிருந்தன.

நாட்டின் பெரும்பான்மையினர் கிராமங்களிலேயே வாழ்கின்றனர். இந்த மக்கள் அன்றாடம் சந்திப்பவைகள், சமூக அமைப்பு; சமூக அமைப்பு முறையினால் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பெரும் பளுக்களைத் தூக்கி வீச அவர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், கிராமிய இயல்புகளோடு ஒட்டிய போராட்டங்கள்; அப்போராட்டங்கள் ஒரு தனி மனிதனுக்கு மேலாக அல்லாமல் அவன் உள்ளடங்கி நிற்கும் வர்க்கத்திற்கெதிராகப் பரிணமித்து வருதல் ஆகிய உண்மைகள் புறக்கணிக்கப்பட்டுப் படைக்கப்படும் எந்த இலக்கியமும் உண்மையான கிராமிய இலக்கியம் ஆகிவிட முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எமது நாட்டில் இதுவரை வெளியான சிருட்டி இலக்கியங்களுள் விரல்விட்டு எண்ணக்கூடிய சில, கிராமப்புற மக்களின் வாழ்வினைப் பிரதிபலித்துள்ளன. அவ்வப்போது அவைகள் கிராமப்புற மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டும் உள்ளன. அந்த வேளைகளில் மௌனம் சாதித்த மெத்தப்படித்தவர்கள் சிலர் இப்போது அந்தச் சிருட்டிகள் மீளாய்வு செய்யப்படவேண்டுமென்று குரல் வைக்கின்றனர். இப்போது இந்தக் குரல் எழுவதற்கான காரணங்கள் என்ன? இந்தக் குரலை வைப்பவர்கள் திடுதிப்பென்று கிராமங்களில் குதித்து, அங்கு செவ்வனே காலூன்றி நின்று, கிராமங்களையும், கிராமிய மக்களையும், அவர்களின் வாழ்க்கை முறைகளையும் படித்திருக்கவேண்டும். அல்லது கிராமப்புற மக்களைத் தங்கள் விருப்பப்படியெல்லாம் பிரித்து வைத்து, வேண்டிய போதெல்லாம் அவர்களை 'ஆடாய்க்கட்டித் தோலாயுரித்து' அவர்களில் குருதி, தசை, நீர், நிணம் ஆகியவைகளைச் சுவைத்துப் பெருவாழ்வு கண்டு மடிந்து போய்விட்டவர்களின் மண்டை ஓடுகளைத் தேடிஎடுத்து விஞ்ஞான ரீதியான ஆய்வு நடத்தி, அவர்களின் அந்த அசுர வாழ்க்கை நடப்புக்கான காரண, காரியங்களைக் கண்டுபிடித்திருக்க வேண்டும். அப்படி எதுவும் நடந்திருப்பதாகத் தெரியவில்லை. பதிலுக்கு இந்தக் குரலை எழுப்புபவர்கள் கிராமப்புற மக்களைவிட்டுத் தூரத்தூரப் போவதையே காணக்கூடியதாக இருக்கிறது. இவர்கள் இப்போது நேருக்கு நேராகவே கோவிந்தனுக்கு மேலாக ஒரு போர் தொடுப்பர் என்பது தெரிந்ததே.

நலிந்தவர்களின் வாழ்க்கையோ, அந்த நலிவிலிருந்து அவர்கள் தங்களை விடுவித்துக் கொள்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளோ இதுவரை தமிழ் இலக்கியத்தில் நவீனகால வரலாற்று அந்தஸ்தினைப் பெற்றதில்லை.

கிராமப் பகுதிகளை அப்படியே காணவைத்து, அதைக் குலைக்காமல், நலங்காமல் நகரவும் வைத்து, அந்த நகர்வுகளுக்கேற்றதான கதை ஒன்றினையும் கண்டடைந்து, சாமுத்திரிகா இலட்சணங்களும் பொருந்திய தலைவன், தலைவியையும், ''வில்லன்'', ''வில்லி''களையும், நடுநிலையாளர்களை


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யும் உலாவவிட்டு, அந்தப் படைப்புக்குட்பட்ட கதாமாந்தர்கள் பாரம்பரிய சம்பிரதாய உறவு முறைகளை மீறி விடாமல் பக்குவமாகப் பாதுகாத்து சுபம் சொல்லி முடிக்கும் 'சோலி சுறட்டற்ற' இலக்கியக்காரனாக என்றால் இருக்க முடியவில்லை.

“உயிரினங்கள் தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை அந்த உயிரினங்களில் உயர்ந்ததான மனித இனத்தோடு சேர்ந்தாப்போல வளர்ச்சி அடைந்து வந்த ஒன்றே ஒன்று காதல் மட்டுந்தான். அதனால் “காதல் இல்லாத இலக்கியங்கள் — முதன்மைப் படுத்தாத படைப்புக்கள் — மனித நாகரீகத்தை வளப்படுத்தத் தகுதியற்ற முண்டங்கள்” என்ற விதத்தில் இந்தக் காதலுக்கு தெய்வீக அந்தஸ்துக் கொடுப்பது மரபாகிவிட்டது. [redacted]. இந்தக் காதல் என்ற 'இது' மனிதனின் வாழ்க்கைத் தேவைகளுக்கு ஏற்ப நீண்டும், நெளிந்தும், வளைந்தும், கூனியும், குறுகியும் வரக்கூடிய ஒன்றே அன்றி, அதற்குமேல் அந்த 'இது'வுக்கு எந்தவித தனி அந்தஸ்தும் இருந்ததில்லை; இருக்கப் போவதுமில்லை என்பதனை இந்த நாவலைப் படிக்கும்போது தங்களைச் சூழ உள்ள இயல்பான நடைமுறைகளோடு வாசகர்கள் இதனை ஒப்பிட்டுப் பார்த்தால் ஒப்புக் கொள்வர்.

பேனாவைக் கையில்வைத்துக்கொண்டு அந்தப் பேனாவுக்குத் தீனி போட சமூகத்தை மேலாக நோட்டமிட்டு தசை உணர்வுகளைப் பேனா வசப் படுத்தி எழுதுவது ஒருவகை.

சமூகத்தில் நடமாடும்போது தற்செயலாக அகப்படும் ஒரு சம்பவத்தை, வெறிமாடொன்றைப் பிடிப்பது போன்று பாய்ந்து பிடித்து ஒரு கைக்குள் அடக்கிக்கொண்டு, கால்களை இடறி நிலத்தைத் தடவி பக்கத்தே கிடக்கும் கயிற்றினை எடுத்து அந்த வெறிமாட்டினைக் கட்டிப்போடுவது போன்ற விதத்தில் கையிலிருக்கும் கதையும் கதைப் பின்ன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லும். மனதிலிருந்து கலைந்து போய்விடுமோ என்ற ஏக்கத்தில் பேனாவை அவசரத்துடனும், ஆவேசத்துடனும் நகர்த்திச் செல்வது இன்னொருவகை.

சமூகத்தோடு சேர்ந்து மக்களின் இன்பதுன்பங்களில் பங்கெடுத்து, அவர்களைப் படித்து, அவர்களிடமிருந்து படித்தவைகளை இலக்கிய ஆளுகைக்குட்படுத்தித் தங்கள் சுமைகளைத் தாங்களாகவே எடுத்தெறியும் போதத்தை அவர்களுக்கு அளித்து இயல்பான முறையில் அவர்களை நகர்த்திச் செல்ல நிதானமாகப் பேனாவை ஓடவிடல் வேறொருவகை.

இந்த மூன்று வகைகளுக்கு உட்பட்டவர்களே விமர்சகர்களுமாவார்கள்.

"நாங்கள் விருப்பு வெறுப்புக்கு உட்படாதவர்கள்; நடுநிலையாளர்கள்" என்று விமர்சகர்கள் கூறுவதெல்லாம் வெறும் பொய்யானவை. அரசியலிலோ இலக்கியத்திலோ, வேறெந்த விவகாரங்களிலோ நடுநிலைமை என்பது ஒன்றில்லை. நீதி, அநீதி என்ற இரண்டு புள்ளிகள் ஒன்றோடொன்று முட்டி நெருங்கிக்கொண்டு நிற்கின்றன. இடையே மூன்றாவது ஒரு புள்ளிக்கு இடமேயில்லை. இதனால் கோவிந்தனை விமர்சிக்கப் புகுபவர்கள் ஏதாவது ஒரு பக்கத்தில் நின்று தங்களை வெளிப்படுத்தியே ஆகவேண்டும். (அல்லது இனங்காட்டிக்கொள்ள மனது இடந்தராதபட்சத்தில்) ஒதுங்கிவிட வேண்டும்.

நன்றி:- "கோவிந்தன்"

* * *

விமர்சகர்களுக்கு!

இந்நூலில் வெளியாகும் கருத்துக்களிற்கான விமர்சனங்களையும் உங்கள் படைப்புக்களையும் 'இந்நூல்' எதிர்பார்க்கின்றது!

— ஆசிரியர் குழு —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடமை

- கார்த்திநேசன் -

காலத்தால் அழியாத பரம்பரை பரம்பரையாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வரும் அனைத்தும் கடமையின் சாதிரோலிய பெயராகும். அதைவிட இவ்வொருவரினதும் வாழ் நாளிலே மேலும் சில பல விடயங்கள் 'கடமை' என்னும் கட்டுக்கோப்பினுள் கொண்டு வருமாறு திணிக்கப்படுகின்றன. இதுதான் கடமையின் அடிப்படைக் கோட்பாடு.

காலத்தின் விளையாட்டால் ஏற்பட்டு வரும் திடீர் மாற்றங்களாலும் திடீர் தாக்கங்களாலும் திணிக்கப் படும் கடமை கருத்தாழம் மிக்க வடிவங்களுக்க அவதாரங்களாக மாறி வருவது இறந்தகால, நிகழ்கால நிகழ்வுகள் எமக்குக் காட்டி வரும் கருத்தான பாடங்களாகும்.

இதில் ஒருவன் தான் குடும்பத்திற்குச் செய்ய வேண்டிய கடமை, நாட்டிற்குச் செய்ய வேண்டிய கடமை, தக்க நேரத்தில் தருணத்தில் கருத்து வேறுபாடின்றி செய்ய வேண்டிய (சில செயற்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்ப்போம் இருவரைக் கடமைதான்) கடமை போன்றவற்றைத் தொகுத்துப் பார்த்தால் இருப்ப நிலையே உருவாகி றது.

எனவே ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய கடமைகளை எப்படிப் பிரித்து அறிவது என்பது இரண்டிய விளைவாக அமைகிறது. இதற்கு இருவழிகள் உண்டு. முதலாவது இவர் இருவிடய த்தைக் கடமையுணர்வோடு ஆராய்ந்து அதை நிறைவேற்றும் பட்சத்தில் அவ ருக்கு ஏற்படும் நடவடிக்கைகள் அவரது எதிர்காலத்தையும் அவரது போக்கை யும் பாதிக்கிறது. எனவே கருதி அதை இறுக்கமான போக்குடன் கடைப்பிடி க்கலாம்.

இரண்டாவது நாம் கடமை யுணர்வோடு ஆராயும் நோக்குடன் அறி ஞர்களும், அனுபவசாலிகளும் கூறும் கருத்துரைகளையும் எச்சரிக்கைகளையும் ஆராய்ந்து அது எம்மைப் பொருந்த வரை எந்த அளவிற்கு உதவும் என்பதையும் சேர்த்து முடிவெடுத்து கடைப்பிடிப்பதும் முறையாகும்.

அதில் இரு விடயத்தை கடமையுணர்வோடு செயற்பாட்டில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்து வரும் போது சில புறக்காரணிகள் அதைப் பாதிக்கத்தான் செய்யும் என்பதை ஒரு போதும் மறக்கக் கூடாது. அப்படி மறந்தால் நினைப்பதை திட்டமிட்டபடி சாதிக்க முடியாது. அப்படிப்பட்ட புறக்காரணிகள் விபரமும் எதிரிகளாகவும் கூட அமையலாம். எனவே கடமையுணர்வுடன் செயற்பாட்டில் இறங்கும் போது ஏற்படும் தடங்கல்களையும் சில பலனையும் சக்தி சாதுரியத்தையும் நேரிய பகுத்தறிவும் பயிற்சி செய்து கொள்ள வேண்டும்.

பயிற்சி என்பது கடமையுணர்வோடு உன் கண்முன் செயற்பட்டுக் கொண்டு இருப்பவர்கள் கையாளும் யுக்திகளை நன்கு கவனித்து உனது செயற்திறனையும் சேர்த்து பிரயோகித்தால் உன்னையறியாத ஒர் உத்வேக உணர்வு பிறக்கும். அதை எந்த புறச்சக்தியாலும் எதிர் கொள்ள முடியாத நிலை ஏற்படும் வரை கெட்டியாகப் பிடித்து செயற்படுவாயேயானால் உனது பயிற்சியில் நிச்சயம் சித்தியெய்தாமல் இருக்க மாட்டாய். இது உறுதியான நிரப்பு.

எனவே மனிதன் கடமை என்ற இட்டக் கோட்பாடு ஒன்றைக் கடைப்பிடித்து வரும் போது அது வெற்றியையும் நல்லதோர் எதிர்காலத்தையும் உருவாக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நல்ல தருணத்தை நழுவ விடலாமோ...?

நோர்வே, சுவீடன், டென்மார்க் ஆகிய ஸ்கன்டிநேவியன் நாடுகளில், தஞ்சம்புகுந்திருக்கும் ஈழத்தமிழ் மாணவருக்குக் கல்விவசதிகள்கூட செய்துகொடுக்கப்படுகின்றன என்பது மகிழ்ச்சிக்கு உரியசெய்தி. அந்தநாட்டு அரசுகள் தமிழ் மாணவரின் உயர் கல்விக்கும் வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்கின்றன என்பது மன நிறைவைத் தருவதாகும்.

ஜெர்மனி, பிரான்ஸ், கனடா போன்ற மேலைநாடுகள், அகதிகளாகத் தஞ்சம்கோரிச்சென்ற ஈழத் தமிழர்களுக்கு ஆரம்பத்தில் ஒரு சில வசதிகளைச் செய்தன. உணவு, உறையுள் ஆகிய அடிப்படை வசதிகளைமட்டுமே அவை செய்யமுன்வந்தன. அவற்றுக்காக ஒருதொகை ஆதாரப் பணத்தை (Dole) வழங்கிவந்தன. ஆனால் தங்கள் நாடுகளுக்குச் செல்லும் தமிழர்களின் எண்ணிக்கை உயர உயர, பிரஸ்தாப நாடுகள் ஆதாரப்பணத்தையே நிறுத்தும் நிலைக்குவந்தன.

ஆனால் முன்னர் குறிப்பிட்ட ஸ்கன்டிநேவியன் நாடுகள், மனித உரிமைகளை மதிக்கும் விதத்தில், திட்டமிட்டு அகதிகளை அனுமதிக்கின்றன. அதன் பின்னர் வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்கின்றன. கல்வி பயிலும் வயதில் பிள்ளைகள் இருந்தால் கல்விவசதியும் செய்து கொடுக்கிறார்கள். உயர்கல்விபெறத் தகுதியுடைய மாணவர்கள் இருப்பின் அதற்கும்வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கிறார்கள். ஜேர்மனி, பிரான்ஸ் ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது ஸ்கன்டிநேவியன் நாடுகள் நியாயபூர்வமாக நடந்துகொள்வதைத் தமிழர்கள் நன்றி அறிதலுடன் பதிவுசெய்துகொள்ளவேண்டும்.

அகதிகளாகிவிட்டதால் இளம்வயது மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டு, அவர்களது எதிர்காலம் பாழடிக்கப்பட்டுவிடக்கூடாது என்ற உயரிய தத்துவத்தின் அடிப்படையிலேயே, பிரஸ்தாப நாடுகள் கல்விவசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கின்றன.

ஆனால் காலத்தால் செய்யப்படும் அந்தப்பெரிய உதவியின் மகத்துவம்புரியாமல், அந்த நாடுகளுக்குச் சென்றுள்ள தமிழ் இளைஞர்கள் தொழில்செய்து பணம் தேடுவதிலேயே அதிகநாட்டம் காட்டுகிறார்கள் என்பது மிகவும் கவலைக்குரியதாகும்.

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்ற முதுமொழி நூற்றுக்கு நூறு அர்த்தபுஷ்டியானது. உரிய பருவத்தே கல்வியைப் பெறவேண்டும். காலத்தைத் தப்பவிட்டால், கல்வியை ஒழுங்காக, சீராகப்பெறமுடியாது. பின்னர் ஒரு காலத்தில் வருந்தநேரிடும். கிடைக்கும் சந்தர்ப்பத்தை நழுவவிட்டு பின்னர் கவலைப்படக்கூடாது.

பணத்தை, இப்போது இல்லாவிட்டால் பின்னர் தேடிக் கொள்ளலாம். கல்வி அப்படியல்ல. உரிய பருவத்தில் கல்வியைத் தேடிக் கொள்ள வேண்டும். தப்பவிட்டால், வாழ்க்கையில் பல கஷ்டங்களை எதிர்நோக்க நேரிடும்.

ஸ்கன்டிநேவியன் நாடுகளில் உள்ள தமிழ் இளைஞர்கள் இதனை நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும். அந்த நாடுகளுக்குப் போய்ச் சேருவதற்குத் தமது பெற்றோர் பட்ட கடனை அடைக்கவும், வயதான பெற்றோரின் சீவியத்துக்கு அங்கிருந்து உதவுவதற்கும் அவர்களுக்குப் பணம் தேவைப்படலாம். ஆனால் அந்தத் தேவைகளை மெதுமெதுவாகச் சமாளித்துக் கொண்டு கல்வி வசதிக்கான வாய்ப்பை தக்கபடி பயன்படுத்தி தமது எதிர்காலத்தை வளமுள்ளதாக்க முனைய வேண்டும்.

ஸ்கன்டிநேவியன் நாடுகளில் கல்வி வசதி பெற்ற மாணவர்கள் மன நெருடுதல்கள், நெருக்கடிகள் எதுவும் இல்லாத சூழ்நிலையில் நிம்மதியாகத் தமது கல்வியைப் பெறும் வாய்ப்பு உண்டு என்பதையும் மறந்துவிடக் கூடாது.

என்ன பணக் கஷ்டம் இருப்பினும் தமக்குக் கிடைத்திருப்பது பொன்னான, பிரத்தியேகமான வாய்ப்பு என்பதை உணர்ந்து கல்வி வசதியைத் தக்கபடி பயன்படுத்த வேண்டும். இதனை இங்குள்ள அவர்களது பெற்றோர்களும், உறவினர்களும் இடித்துரைக்க வேண்டும்.

நல்ல தருணத்தை நழுவ விடலாமோ.....?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஏகாதிபத்திய சக்திகளுக்கு இரையாகாதீர்!

# சகல இயக்கங்களும் போராளிகளும் விழிப்புடன் செயற்படுவது அவசியம்!

## முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கோரிக்கை

"ஒரு இயக்கத்தை இன்னொரு இயக்கத்துக்கெதிராகத் தூண்டி விட்டு இறுதியில் சகல இயக்கங்களையும், போராளிகளையும் அழிக்கும் பேரினவாதத்தின் சூழ்ச்சிகளுக்கோ அல்லது ஆசியாவில் தேசிய விமோசன இயக்க அணிசேரா இயக்கக் கோட்டையைச் சீர்குலைத்த இந்த மகா சமுத்திரத்தில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட ஏகாதிபத்தியம் பின்னுகின்ற சதிகளுக்கோ இரையாகாமல் அனைத்த இயக்கங்களும், போராளிகளும் விழிப்புடனும், பொறுப்புடனும், நிதானத்துடனும் செயற்படுவது அவசியம்."

இவ்வாறு இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

மேற்படி எழுத்தாளர் சங்கச் செயலாளர் திரு. பிரேம்ஜி ஞானசுந்தரம் ஒப்பமிட்டு வெளியிட்டுள்ள இவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

இலங்கையில் இன்னமும் தீர்க்கப்படாதிருக்கும் இன நெருக்கடி ஒரு தேசிய நெருக்கடியாகவும் பிராந்திய நெருக்கடியாகவும் மாறிக் கொண்டிருப்பது குறித்த இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தனது ஆழ்ந்த கவலையையும் விசனத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

சம்பந்தப்பட்ட அடிப்படைப் பிரச்சினைகளை மிகுந்த நிதானிப்புடனும் எதார்த்த அரசியல் பார்வையுடனும் அணுகாத உணர்ச்சிகளையும் குறுகிய அரசியல் நோக்கங்களையும் கொண்டு தீர்க்க எடுக்கப்படும் முயற்சிகள் நாடு முழுவதையும் அழிவின் விளிம்புக்கும், இரத்தச் சாக்காட்டிற்கும் இட்டுச் செல்வதை நாம் பெரு வேதனையுடன் நோக்குகிறோம்.

ஒரு சிக்கல் தீர்க்கப்படுவதன் பேரால், மேலும் மோசமான சிக்கல்கள் தீர்க்கதரிசனமற்ற, அரசியல் விவேகமற்ற விதத்தில் உருவாக்கப்படுகின்றன.

இந்த நிலையில் அரசியல் தெளிவும் தேசிய — பிராந்திய பிரச்சினைகள் பற்றிய விளக்கமும் சரியான தீர்வு காண்பதற்கான அரசியல் விவேகமும் அவசியம்.

இன்றுள்ள அடிப்படைப் பிரச்சினை தமிழ் மாநிலத்தில் அமைதி நிலவுவதா இல்லையா என்பது, தமிழர் பிரச்சினைக்கு நிலையான தீர்வு உண்டா இல்லையா என்பது, தமிழர்களுக்கு முழுமையான சுயாட்சி கிடைக்கிறதா இல்லையா என்பது, தமிழர்கள் பாதுகாப்புக்கு உத்தரவாதம் உண்டா இல்லையா என்பது. இந்த அடிப்படைப் பிரச்சினைக்கு நிலையான, உறுதியான, நீதியான தீர்வு ஏற்படுமானால் அழைப்பின் பேரில் வந்த அந்நியப்படை இந்த மண்ணில் இருப்பது என்ற பிரச்சினைக்கே இடமில்லாமல் போய் விடும்.

பிரச்சினையின் இந்த கருமையத்தை விட்டு விட்டு, புறக்கணித்துவிட்டு ஆவேசம் கொள்வது நெருக்கடியை மேலும் மோசமாக்கும், வியாபிதமாக்கும், ஒட்டு மொத்த தேசிய அழிவுக்கும் அனர்த்தங்களுக்குமே வழிவிடும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனவேதான் இந்த பேரழிவைத் தவிர்க்க;

நெருக்கடி மையங்களை தீவிரப்படுத்துவதற்குப் பதிலாக, அவற்றின் வீச்சை குறைப்பதும்;

தேசிய ரீதியிலும் பிராந்திய ரீதியிலும் அமைதியையும் சகஜ நிலையையும் உறுதிப்படுத்துவதும்;

குறுகிய தேசியவாதம், பேரினவாதம், இனவாதம் என்ற தவறான, இந்த நாட்டுக்கு அழிவுக்கு மேல் அழிவைக் கொண்டு வந்த நிலைப்பாடுகளை நேர்மையுடன் கைவிட்டு சம்பந்தப்பட்ட எல்லாப் பிணக்குகளையும் இணக்கமாகத் தீர்ப்பதற்கான வழிவகைகளையும் உபாயங்களையும் புதிய அரசியல் சிந்தனையின் அடிப்படையில் கூட்டாக மேற்கொள்வதும் அவசர அவசியமாகும்.

இதற்கு;

சவால், எதிர்ச்சவால், எச்சரிக்கை பதில் எச்சரிக்கை என்ற அநாவசியமான போக்குகளைத் தவிர்த்து, நேசபூர்வமான சூழலில் சம்பந்தப்பட்ட விஷயங்கள் முழுமையும் பற்றி உடனடியாகப் பேச்சுவார்த்தையை இலங்கை அரசும் இந்திய அரசும் ஆரம்பிக்க வேண்டும்.

இலங்கை அரசுக்கும் — விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமிடையில் இடம்பெறும் பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமாகவும் துரிதமாகவும் பயனுள்ள வகையிலும் நடை பெறுவதுடன், இனப் பிரச்சினைக்கு நிலையான — நீதியான தீர்வு காண்பதையும், அழிந்த மண்ணுக்கும் மக்களுக்கும் ஆக்கத்தைக் கொண்டு வருவதையும், ஏகாதிபத்திய சூழ்ச்சிகளிலிருந்து பிராந்தியத்தின் அமைதியையும் பந்தோபஸ்தையும் உறுதிப் படுத்துவதையும் மட்டுமே இது நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்.

தேசிய அமைதியையும் இனப் பிரச்சினைக்குத் தீர்வையும் காணும் நிகழ்வுப்போக்கில் சம்பந்தப்பட்ட தரப்புகள் அனைத்தும் சேர்த்துக் கொள்ளப்படுவதும் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் அனைத்து அரசியல் சக்திகளினதும் ஒத்துழைப்பைப் பெறுவதும் நிலையான தீர்வுக்கும் நிரந்தர அமைதிக்கும் அத்தியாவசியமான முன் தேவைகளாகும். யாருக்கும் எதிராகவோ யாருக்கும் குறுகிய ஆதாயம் தேடும் விதத்திலுமோ இன்றைய ஆபத்தான பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது, முயலவும் கூடாது.

எல்லாவிதமான ஆயுத நடவடிக்கைகளும் உடன் நிறுத்தப்படுவதும், கோஷ்டி மோதுதல்கள் உடனடியாகக் கைவிடப்படுவதும் அவசர அவசியம்.

சம்பந்தப்பட்ட அனைத்துச் சக்திகளும் ஜனநாயகத்திலும், அடிப்படை ஜனநாயகக் கோட்பாடுகளிலும், ஒவ்வொரு மக்களுக்கும் ஒவ்வொரு இனத்திற்கும் ஒவ்வொரு அரசியல் கருத்தருவத்திற்குமுள்ள மீற முடியாத ஜனநாயக உரிமைகளிலும் தமக்குள்ள விசுவாசிப்பை ஐயந்திரிபறச் செயலலில் பிரகடனப் படுத்த வேண்டும்.

ஏலவே ஈட்டப்பட்ட, மட்டுப் படுத்தப்பட்ட உரிமைகளைத் தானும் இழந்துவிடாமலும் மாறாக மேலும் உரிமைகளையும் அதிகாரங்களையும் பெற்ற முழுமையான பிரதேச சுயாட்சியை சுயநிர்ணயத்தை நோக்கி முன் செல்ல கூட்டாக வழிகாண வேண்டும்.

ஒரு இயக்கத்தை இன்னொரு இயக்கத்திற்கு எதிராகத் தூண்டிவிட்டு இறுதியில் எல்லா இயக்கங்களையும் போராளிகளையும் அழிக்கும் பேரினவாதத்தின் சூழ்ச்சிகளுக்கோ, அல்லது ஆசியாவில் தேசிய விமோசன இயக்க, அணிசேரா இயக்க கோட்டையைச் சீர்குலைத்த இந்த மா சமுத்திரத்தில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட ஏகாதிபத்தியம் பின்னும் சதிகளுக்கோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரையாகாமல் அனைத்து இயக்கங்களும் போராளிகளும் விழிப்புடனும் பொறுப்புடனும் நிதானத்துடனும் செயற்படுவது அவசியம்.

1983 இல் இடம் பெற்றதிலும் பார்க்க படுமோசமான இரத்த பெருக்கு ஏற்படக்கூடிய அபாயத்தைத் தடுக்கவும், பிராந்திய மோதுதல் முழுவதைத் தவிர்க்கவும் ஆவன அனைத்தும் செய்யப்படவேண்டும். அனைத்து அரசியல் — சமூக சக்திகளினதும் முயற்சிகள் இதை சோக்கி ஆற்றப்படுத்தப்படல் அவசியம்.

உருவாகிவரும் அதிபயங்கர நிலைமையைத் தவிர்க்க அனைத்து இயக்கங்களும் போராளிக் குழுக்களும் சொந்த நலன்கள், சொந்த தலைமைத்துவங்கள் பற்றிய குறுகிய பார்வையை விடுத்து தமிழினத்தின் பொது நலனை எல்லாவற்றிற்கும் மேலாக முன்னிறுத்த வேண்டும். கடந்த கால, நடப்பு பகைமைகளை, பூசல்களை மறந்து பொது அணியில் திரள்வது காலத்தின் தேவை, தமிழனத்தின் ஏகோபித்த கோரிக்கை.

மேற்கண்ட அரசியல் சிந்தனையின் அடிப்படையில் இயக்கங்களின் தலைவர்களைச் சந்திக்கவும், கருத்துப் பரிமாறவும் அவர்கள் இஷ்டப்படும்பட்சத்தில் அவர்கள் அனைவரையும் சந்திக்க ஏற்பாடு செய்யவும் இ.மு.எ.ச. தயாராக இருக்கிறது.

தகவல் உதவி: ஸ்ரீ பழனிவேல். இ

* * *

யுத்தம் என்பதோ புரட்சி என்பதோ இலேசானதில்லை. அது தூரிகையால் சித்திரம் வரைவது போலவோ நல்ல சங்கீதம் கேட்பது போலவோ இனிமையானதில்லை. யுத்தம் என்பது வலி, அவமானம், துக்கம், வேதனை நிரம்பியது. அவமானம் ஏற்படாத புரட்சியில்லை. வெட்டு விழாத யுத்தமில்லை. இரண்டு தலைமுறையின் மரபு மோதல் கூட யுத்தம் போன்றது தான்.


— பாலகுமாரன் —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடியல்




எப்பொழுதும்
என் இதய வானம்
இருண்டே கிடக்கின்றது
இருள் விலக
உதய சூரியன்
எழுந்து வரவும் இல்லை
இளைய நிலா
ஒரு முறையும்
எட்டிப் பார்த்ததும் இல்லை
இருள்
உலகம் சூழ்வது கூட
தெரியவில்லை
விலகிடாத இருளில்
விம்மி அழும் இதயம்
எப்போது
விடியப் போகின்றது,
அதில்
விடி வெள்ளி
எப்போது
தெரியப் போகின்றது

நல்லை கண்ணன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிர் வரும் 14ந்திகதி (ஜுலை மாதம்) புது பிரான்ஸ் தேசமெங்கும் பெரிய நாள் திருவிழாவாகக் கொண்டாடுகின்றது. அது வழக்கம் போலல்லாது இவ்வருடம் சிறப்பு வாய்ந்ததாகும். காரணம் 16ஆம் லூயி மன்னனின் கொடுங்கோலாட்சியின் பிடியகப்பட்டு மக்கள் பெரியார் புணைக்கப்பட்ட இருநூறாவது வருடம் இதுவென்பது இச்சிறப்பம்சமாகும்.

1789ஆம் ஆண்டுக்கு அண்மியதான காலத்தில் லூயி மன்னர்கள் ஆட்சியில் வந்த 16ஆம் லூயி மன்னரின் ஆட்சியின் கீழ் புது பிரான்ஸ் தேசம் இருந்தது. இவனது ஆட்சிக்காலத்தில் மக்கள் மிகவும் கொடுமைப் படுத்தப்பட்டார்கள்.

ஏன் என்று கேள்வி கேட்டவர்கள் கொடுமையான சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டதுடன் சித்திரவதைக்குப் பெயர் போன பாஸ்றில் (Bastile) கோட்டையில் அடைக்கப் பட்டனர். அத்துடன் கிலற்றின் (GILLATIN) என்னும் கொலைக் கத்திக்கும் இரை


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாக்கப் பட்டனர். பல்லாயிரக் கணக் கான மக்கள் படுகொலை செய்யப்பட் டனர்.

பொறுமையின் எல்லைக்கு விரட்டப்பட்ட மக்கள் பொங்கி எழுந்து 1789 ஆம் ஆண்டு ஆடிமாதம் பாஸ்டில் கோட்டையைத் தாக்கி அங்கு சிறை வைக்கப்பட்டி ருந்த பொதுமக்களை விடுதலை செய்த னர்.

அத்துடன் அரண்மனையில் வாழ்ந்த 16ஆம் லூயியையும் அவன் பட்டத்தையும் அழித்தொழித்தனர்.

இதன் பின்னர் நாடு குடியரசு முறைக்கு மாற்றப்பட்டு ஜனாதிபதி ஆட்சி ஏற்படுத்தப்பட் டது.

முதல் மக்கள் எழுச்சியான பிரெஞ்சுப் புரட்சியின் 200 ஆம் ஆண்டு நிறைவு விழாவே எதிர் வரும் 14ஆந் திகதி NATIONAL FAIT ஆக கொண்டாடப்பட விருக்கின் றது.

அந்த உலக நாட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைவர்களும் மக்களும் கலந்து கொள்ளவிருக்கும் இவ்விழாவில் வெளி ஐரோப்பிய நாட்டுத் தலைவர்களும் ஆசிய நாட்டுத் தலைவர்களும் கலந்து கொள்ளவிருப்பது சிறப்பாகும்.

நாடகம், பாலே, OPERA, பாப்-ஜாஸ் ஆகிய இசைகளில் உள்நாட்டுக் கலைஞர்களும் வெளி நாட்டுக் கலைஞர்களும் கலந்து கொள் ளும் பல கலை நிகழ்ச்சிகள் நடை பெற இருக்கின்றன.

இந் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவிருக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அமெரிக்க பிரித்தானிய தலைவர்களுடன் இந்து சமுத்திரப் பிரா ந்திய அரசியல் நிலைமைகள் குறித்து பேச்சு வார்த்தை நடாத்த இருப்ப தாக அறியப்படுகின்றது. இதில் தமிழ ஈழப் பிரச்சினையும் முக்கிய விடயமாம் என்பது குறிப்பிடத் தக்கது.

மக்கள் புரட்சியின் 200 வது வருடத்தைக் கொண்டா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இடர் பிரெஞ்சு மக்களின் மனைவிகளின் மனத்துயர்களில் நாமும் எமது இதயங்களுடன் இணைந்து கொள்வோம்.

* * *

விடுதலையும், அன்பும் ஒன்றாகவே செல்லும். அன்பு ஒன்றின் பிரதிபலிப்பன்று. நீ என்னை நேசிப்பதனால், நான் உன்னை நேசித்தால், அது வெறும் வர்த்தகமே. அது மற்றையவரிடம் வாங்கவேண்டிய ஒன்று. அன்பல்ல. அன்பு ஒன்றையும் எதிர்பார்க்காது. அந்த அன்பிலேயே விடுதலையை உணர முடியும்.

ஜே. கிருஷ்ணமூர்த்தி

'தீர்த்து' மடலை அனுப்பத் தொடர்புகளிற்கும்,

S. UTHAYA KUMAR
C/O N. GANDHI NESAN
18 RUE HENRI BARBUSSE
92000 NANTERRE
FRANCE

* * *



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# THE VALUE OF A SMILE

* * *

IT COSTS NOTHING, BUT CREATES MUCH.

IT ENRICHES THOSE WHO RECEIVE, WITHOUT IMPOVERISHING THOSE WHO GIVE.

IT HAPPENS IN A FLASH AND THE MEMORY OF IT SOMETIMES LASTS FOREVER.

NONE ARE SO RICH THEY CAN GET ALONG WITHOUT IT, AND NONE SO POOR BUT ARE RICHER FOR ITS BENEFITS.

IT CREATES HAPPINESS IN THE HOME, FOSTERS GOOD WILL IN A BUSINESS, AND IS THE COUNTERSIGN OF FRIENDS.

IT IS REST TO THE WEARY, DAYLIGHT TO THE DISCOURAGED, SUNSHINE TO THE SAD, AND NATURE'S BEST ANTIDOTE FOR TROUBLE.

= FRANK IRVING FLETCHER =

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலத்தால்
கருத்துடன்
உருவெடுக்கும்
கருவூலங்களில்
ஒன்றான

# சிந்து

உங்கள்
உயர்வான
சஞ்சிகை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்